**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திரு. பா. பாலமுருகன், B.Com., B.L.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**

**2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08 ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No. 3/2022 In O.S.No. 202/2017**

1) சண்முகம்

2) விஜயலட்சுமி

3) மணிமேகலை

4) பாலசுப்பிரமணி

5) தங்கவேலு

.....மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1) ராஜீ (எ) சுப்பிரமணியன்

2) துளசி

3) துரைசெட்டியார் (இறப்பு)

4) செந்தில்குமார்

5) சிவானந்தம்

6) திருவேங்கடம்

7) அருன் (எ) அருண்குமார்

.....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

PP.1. தனபாக்கியம்

PP.2. செல்வம்

PP.3. வெங்கடாஜலபதி

PP.4. சாந்தி ......எதிர்மனுதாரர்கள்/ proposed parties

இம்மனு என் முன்பாக 01.12.2022 ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. B. மலர்கண்ணன் அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராகவும், 2 , 4 முதல் 7

எதிர்மனுதாரர்கள், 1 மற்றும் 2 புரபோஸ்டு பார்ட்டிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R. கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

மனுவில் கண்டபடி இறந்துபோன 3 ம் பிரதிவாதிக்கு, வாரிசுதாரர்களை சேர்த்து வழக்கினை மேல்நடத்த கேட்டு உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 4 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்

1. மனுதாரர் மனுவில் 1ம் மனுதாரர். அசல் வழக்கில் 1ம் வாதி. மனுதாரரும் மற்ற மனுதாரர்களும் பிரதிவாதிகள் பெயரில் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள போது 3ம் பிரதிவாதி துரைசெட்டியார் 16.09.2019 ம் தேதி இறந்துவிட்டார். இறந்து போன 3 ம் பிரதிவாதிக்கு மனுவில் கண்ட புரபோஸ்டு நபர்களான மனைவி, மகன் மற்றும் மகள் மட்டுமே வாரிசுகள். மனுதாரர் தற்போது தான் இறந்து போன 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை தெரிந்துக்கொண்டதால் 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை தாவாவில் 8 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்கும் பொருட்டு 3ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களான மனுவில் கண்ட நபர்களை வாரிசுதாரர்களாக சேர்க்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த எதிர்உரை ஆட்சேபனையின் சுருக்கம்

2. மனுதாரர்களின் மனு நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதி 10.09.2019 ம் தேதி இறந்து விட்டதாக தெரிகிறது என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு மனுவில் கண்ட புரபோஸ்டு நபர்கள் வாரிசுகள் என்பதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள் 3ம் பிரதிவாதி இறந்து போன விபரத்தை தெரிந்து கொண்டு 3 ஆண்டுகாலமாக வாரிசுகள் சேர்க்க உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல் வழக்கை காலம் கடத்தும் நோக்குடன் இந்த

மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே மேற்படி மனுதாரர்களின் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை.

4. தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது, இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. தாவா அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது நிலுவையில் உள்ள நிலையில், 3ம் பிரதிவாதி துரைசெட்டியார் கடந்த 16.09.2019 ம் தேதியில் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை சேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் குறிப்பிட்டுள்ள நபர்களை தவிர 3ம் பிரதிவாதிக்கு வேறு வாரிசுகள் யாரும் இல்லை என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இறந்து போன 3ம் பிரதிவாதிக்கு மனுவில் கண்ட புரபோஸ்டு நபர்கள் வாரிசுகள் என்பதை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டுமென்றும், மனுதாரர்கள் 3ம் பிரதிவாதி இறந்து போன விபரத்தை தெரிந்து கொண்டு 3 ஆண்டுகாலமாக வாரிசுகள் சேர்க்க உரிய காலத்தில் மனு தாக்கல் செய்யாமல் வழக்கை காலம் கடத்தும் நோக்குடன் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்வைக்கப்பட்டது. பொதுவாக ஒரு வழக்கில் ஒரு நபர் இறந்துவிடும் பட்சத்தில் அவரது வாரிசுகளை தரப்பினராக சேர்க்கவேண்டியது சட்ட நடைமுறையாகும். எனவே, நீதியின் நலன் கருதி 3ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துக்கொள்ள இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2022 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 08 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**Sd/-P.பாலமுருகன்**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

குளித்தலை.

| | | |
|---|---|---|
| **மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி** | - | இல்லை |
| **எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** | - | இல்லை |

**Sd/-P.பாலமுருகன்**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

குளித்தலை.

**DMC, Klt.,**

**Draft Order**
**I.A.No.1392/2018**
**in**
**O.S.No.45/2014**

**Date : 22.07.2019**